முருகப்பெருமான் துணை

**மகான் தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.09.2022, வெள்ளிக்கிழமை

1. தருமனே கலியினில் அவதரித்த
   தவராசனே ஆறுமுக அரங்கனே
   பெருமை மிக்க ஞானயுகம் படைக்க
   பிரணவ சூட்சுமமாக வந்த தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அருளாசி தன்னை
   ஆசிபட சுபகிருது யாளி திங்கள்
   அறிவிப்பேன் மூவைபீர் திகதி புகர்வாரம்
   (சுபகிருது வருடம் ஆவணி மாதம் 17 நாள், 02.09.2022 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் தொண்டரடிப்பொடியாழ்வாரும்
   வழங்குவேன் உலகோர் நலம்பெற
   தரமான தொண்டர்படைகளை
   தரணியெங்கும் உருவாக்கி இனிதே
4. இனிதே உலகமாற்றம் செய்ய
   ஏகாந்த சரவண சோதி ஏற்றி
   கனிவேலவன் வழிபாட்டை தந்து
   கருணைபட அருளும் அரங்கன்
5. அரங்கன் சொல் செயலான
   அறமோடு அருளுபதேசம் தனை
   வரங்களாக ஏற்று மக்கள்
   வணங்கிப் பின் தொடர்ந்துவர
6. வருகவே உலக மக்களிடை
   வந்தடையும் ஞான பலம்
   தரும சிந்தைகளும் பெருகியே
   தரணியோர் அன்னதான சேவை ஆற்றி
7. ஆற்றியே தொண்டால் உயர்ந்து
   அனைவரும் ஆறுமுகனார் வழிபாட்டால்
   ஆற்றல் பெருக்கம் கண்டுமே
   அனைவரும் ஞானவான்கள் ஆவர்
8. ஆவரே அரங்கன் தேற்றலால்
   அகிலம் மாற்றம் வல்ல
   அவதார ஞானிகள் ஆகி
   அறிவிப்பேன் அற்புதம் படைப்பர்
9. படைக்கவே பண்பாளர் கூடிய
   பரோபகாரம் மிக்க சபையாக
   தடையற உலகில் மாற்றம் கண்டு
   தமிழகம் தொட்டு பேருலகமே

10. உலகமே ஞான ஆட்சி பெறும்
உலகினில் இன பேத நிலையோ
கலகம் மாச்சர்யம் ஏதுமிலா
கந்தவேலனின் ஆளுமை கொண்ட

11. கொண்டநல் ஞான யுகம் மாற்றம்
குருவரங்கன் வழி தொண்டர்களால்
தொண்டுவழி இனிதே காண்கும்
தெரிவித்த அருளாசி முற்றே

–சுபம்–